# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2095/8 - 2018 ඔක්තෝබර් මස 30 වැනි අඟහරුවාදා - 2018.10.30

*2095/8 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: 3/1/A/ஒ/அ.ப/1.

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் கோவை இல.: LD/05/2009/A/ 42.

ஒரு பகிரங்கத்தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியினை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், பொல்கஹவெலை பிரதேச செயலாளர் பிரிவில், உடப்பொல ஓத்தொட்ட கோறளை சிறு பிரிவில், பனலிய கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2018.08.15 ஆந் திகதிய கு: 2405 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு இல. 1 எனக் காட்டப்பட்ட கீழ் விபரிக்கப்பட்ட காணித் துண்டு :

*1. துண்டு இல. 1*

காணியின் பெயர் : செரபீஸ் வத்த ; உரிமை கோருவோர் : காணிச் சீர்திருத்த ஆணைக்குழு ; விஸ்தீரணம் : 2.0381 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி மு. ப 10.00 மணிக்கு பொல்கஹவெலை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டீ. அனோமா திசாநாயக்க,
பிரதேச செயலாளர்,
பொல்கஹவெலை.

பிரதேச செயலகம்,
பொல்கஹவெலை,
2018, ஒற்றோபர் 26.

*11 - 596*


1A - G 28819 - 17 (2018/10) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.